வணக்கம்

ஆல் இண்டியா ரேடியோ-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : மலர்விழி

தேதி : 05.10.2023 நேரம் : மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

அனைத்து மாநிலங்களின் வளர்ச்சி மூலமாகவே, இந்தியா முன்னேறிய நாடாக மேம்பட முடியும் என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இன்று வடலூர் வள்ளலாரின் 200ஆம் ஆண்டுப் பிறந்தநாளை ஒட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி அன்னாருக்கு புகழாரம் சூட்டி உள்ளார்.

தமிழகத்தில், இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புகள் மூலம் பொருளாதாரத்தை மேம்படுத்த, அரசு, நடவடிக்கை எடுத்து வருவதாக, தமிழக முதலமைச்சர் திரு. முக. ஸ்டாலின் கூறியுள்ளார்.

சிக்கிமில் நேற்று **பனியாற்று** ஏரி கரை உடைந்து ஏற்பட்ட திடீர் வெள்ளத்தால் உயிரிழந்தோர் எண்ணிக்கை, 14ஆக அதிகரித்து உள்ளது.

-----------------------

*மோடி-ராஜஸ்தான்* 1 (17)

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூரில், மொத்தம் 5 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் பல்வேறு திட்டங்களை தொடக்கி வைத்து, வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். இந்தியாவின் பாரம்பரிய கலாச்சாரம், வளம் மற்றும் வீரத்தை இப்போதும் அனைவரும் காணத் தகுந்த மாநிலம் ராஜஸ்தான் என்றும், இந்தியாவின் வளமான எதிர்காலத்தை பிரதிபலிக்கும் மாநிலமாகவும், ராஜஸ்தான் மேம்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். ராஜஸ்தான் உள்ளிட்ட மாநிலங்களின் வளர்ச்சி மூலமாகவே, இந்தியா முன்னேறிய நாடாக மாற முடியும் என்றும் அவர் கூறினார்.

ஜோத்பூரில் இன்று பிரதமர் தொடக்கி வைத்த திட்டங்களில், சாலை, ரயில், விமான போக்குவரத்து, சுகாதாரம் மற்றும் உயர் கல்வித் திட்டங்கள் அடங்கும். ஜோத்பூர் ஐஐடி உயர்கல்வி நிறுவனத்தின் புதிய வளாகத்தை, பிரதமர் இன்று, நாட்டிற்கு அர்ப்பணித்து வைத்தார். ஜோத்பூர் எய்ம்ஸ் மருத்துவமனையில், 350 படுக்கைகள் கொண்ட விபத்து சிகிச்சை மையம்

அமைக்கும் பணிகளுக்கும், பிரதமரின் ஆயுஷ்மான் பாரத்-சுகாதார உள்கட்டமைப்புத் திட்டத்தின் கீழ், ராஜஸ்தான் மாநிலத்தின் 7 மருத்துவமனைகளில், தீவிர சிகிச்சை மையங்களை அமைக்கும் பணிகளுக்கும் அவர் அடிக்கல் நாட்டினார். ஜோத்பூர் விமான

*மோடி-ராஜஸ்தான் 2 (4)*

நிலையத்திற்கு, புதிய, அதிநவீன முனையக் கட்டிடம் கட்டும் பணிகளையும், பிரதமர் அடிக்கல் நாட்டித் தொடக்கி வைத்தார். இத்திட்டங்களால், பிராந்திய பொருளாதாரம் வலுவடைந்து, வேலை வாய்ப்புகள் அதிகரிக்கும் என்றும், சுற்றுலாத் துறை ஊக்கம் பெறும் என்றும், அவர் தெரிவித்தார்.

*மோடி-ஜபல்பூர் (13)*

தொடர்ந்து, மத்திய பிரதேஷ் மாநிலம் ஜபல்பூரில் நடைபெற்ற விழாவில், 12 ஆயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்பில், மத்திய பிரதேஷ் மாநிலத்திற்கான பல்வேறு திட்டங்களை, பிரதமர் தொடக்கி வைத்து, வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். சாலை, ரயில், எரிவாயுக் குழாய் பாதை, வீட்டு வசதி, மற்றும், குடிநீர் வினியோகத் திட்டங்கள் இதில் அடங்கும்.

பிரதமரின் நகர்ப்புற வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், மத்திய பிரதேஷ் மாநிலம் இந்தூரில், நவீன கட்டுமான தொழில்நுட்பங்கள் மூலம் கட்டப்பட்டுள்ள, இலகு ரக வீடுகளையும், பிரதமர் திரு. நரேந்திர மோடி திறந்து வைத்தார். 128 கோடி ரூபாய் செலவிலான இத்திட்டத்தினால், ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயன்பெற உள்ளன.

ஜல் ஜீவன் இயக்கத்தின் கீழ், ஜபல்பூர், மண்ட்லா மற்றும் திந்தோரி மாவட்டங்களில் மொத்தம் 2 ஆயிரத்த 350 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட உள்ள பல்வேறு திட்டங்களுக்கும் பிரதமர் அடிக்கல் நாட்டினார்.

-----------------------

*மோடி-வள்ளலார் 1 (19)*

இன்று வடலூர் வள்ளலாரின் 200ஆம் ஆண்டு பிறந்தநாளை ஒட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி அன்னாருக்கு புகழாரம் சூட்டி உள்ளார். 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இந்தியாவின் மிகச் சிறந்த ஆன்மீக குருமார்களில் ஒருவர் வடலூர் வள்ளலார் என்றும், அன்னாரின் ஆன்மீக அகப்பார்வைகள் இதுவரை லட்சக் கணக்கான மக்களுக்கு உணர்வூக்கம் அளித்து வருவதாகவும், வீடியோ செய்தி ஒன்றில் பிரதமர் கூறியுள்ளார். வள்ளலார் சிந்தனைகளின் தாக்கம் உலக அளவில் பரந்து விரிந்து

இருப்பதாகவும், அன்னாரின் லட்சியங்கள் நிறைவேற்றும் பணியில் பல அமைப்புகள் ஈடுபட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இந்தியாவின் கலாச்சார விவேகத்தில், பல வேறுபாடுகள் உண்டு என்றாலும், சிறந்த குருமார்களின் இந்த வேறுபாடுகளை ஒருங்கிணைத்து, ஒரே பாரதம்-உன்னத பாரதம் என்னும் உணர்வை உருவாக்கி இருப்பதாகவும், பிரதமர் கூறியுள்ளார். வள்ளலாரின் லட்சியங்களை நிறைவேற்ற தமது அரசு உறுதி பூண்டுள்ளதாகவும், அன்பு, கருணை, மற்றும், நீதி பற்றிய வள்ளலாரின் போதனைகளை பரப்பும் பணியில் அனைவரும் ஈடுபட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

தேசிய கல்விக் கொள்கையினால் நாட்டின் கல்விச் சூழல் பெருமளவில் மாறி வருவதாகவும், ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் புதுமையாக்க முயற்சிகளுக்கு தற்போது அதிக முக்கியத்துவம் அளிக்கப்

*மோடி-வள்ளலார் 2 (6)*

படுவதாகவும் பிரதமர் தமது செய்தியில் தெரிவித்துள்ளார். நாட்டில் கடந்த 9 ஆண்டுகளில், சாதனை எண்ணிக்கையில் புதிய பல்கலைக்கழகங்கள், பொறியியல் கல்லூரிகள் மற்றும் மருத்துவக் கல்லூரிகள் தொடக்கப்பட்டு இருப்பதால், இளைஞர்கள் தங்களின் சொந்த மொழியிலேயே படித்து, பொறியாளர் மற்றும் மருத்துவர்களாக மேம்பட முடிவதாகவும், இதனால் இளைஞர்களுக்கு பல புதிய வாய்ப்புகள் திறக்கும் என்றும், அவர் கூறியுள்ளார்.

------------------------

*ஸ்டாலின் (12)*

தமிழகத்தில் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதன் மூலம் பொருளாதாரத்தை மேம்படுத்த, தேவையான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாக, தமிழக முதலமைச்சர் திரு. முக. ஸ்டாலின் கூறியுள்ளார். ஜப்பானைச் சேர்ந்த, ஹட்டாச்சி எனர்ஜி நிறுவனம் சார்பில், சென்னை போரூரில் அமைக்கப் பட்டுள்ள, தொழில்நுட்ப மற்றும் புதுமையாக்க மையத்தை திறந்து வைத்து பேசுகையில், இன்று அவர், இவ்வாறு கூறினார். இம்மையத்தினால், 2 ஆயிரத்து 500 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்தார். முன்னதாக, தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு பெற்ற 148 பெண்கள் மற்றும் 2 திருநங்கை ஓட்டுனர்களுக்கு புதிய ஆட்டோக்களை, அவர் வழங்கினார். தமிழக முதலமைச்சர் திரு. முக. ஸ்டாலின் தஞ்சையில் நாளை, பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வார் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

------------------------

ரங்கசாமி (7)

புதுச்சேரியில், குற்றம் மற்றும் புலனாய்வு பிரிவுக்கான முதுநிலை காவல் துறை கண்காணிப்பாளர் திரு. பிரிஜேந்திர குமாருக்கு, காவல் துறைத் துணைத் தலைவர் பொறுப்பு தற்காலிகமாக வழங்கப் பட்டுள்ளதை தொடர்ந்து, அவர் இன்று, முதலமைச்சர் திரு. ரங்கசாமியை, நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார். மாநில உள்துறை அமைச்சர் திரு. நமச்சிவாயம், சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், அரசு கொறடா திரு. ஏகேடி ஆறுமுகம் ஆகியோர் உடன் இருந்தனர்.

------------------------

சிக்கிம் 1 (18)

சிக்கிமில் நேற்று பனியாற்று ஏரி கரை உடைந்து ஏற்பட்ட திடீர் வெள்ளத்தால் உயிரிழந்தோர் எண்ணிக்கை, 14ஆக அதிகரித்து உள்ளது. சுமார் 102 பேரை காணவில்லை என்றும், தகவல் வெளியாகி உள்ளது. லாச்சென் பள்ளத்தாக்கு பகுதியில், தீஸ்தா நதியில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ள நிலையில், தேடுதல் வேட்டை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தேசிய பேரிடர் மீட்புப் படையின் 3 பிரிவுகள் இப்பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளன. வானிலை நிலவரங்கள் சரியான உடன், சுங்தாங்-கில் இருந்து மேலும் ஒரு NDRF குழுவினர், விமானம் மூலம் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அனுப்பப் படுவார்கள் என்றும், குவஹாத்தி மற்றும் பாட்னாவில் 3 மீட்புக் குழுக்கள் சிக்கிமிற்கு புறப்படத் தயார் நிலையில் உள்ளதாகவும், NDRF வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. பாதிக்கப் பட்டவர்களுக்கு மருந்து உள்ளிட்ட உதவிப் பொருட்களை வழங்கும் பணிகளில் ராணுவத்தினர் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். மக்களுக்கும், ஆங்காங்கே சிக்கி உள்ள சுற்றுலாப் பயணிகளுக்கும் தொலை தொடர்பு உதவிகளையும் இவர்கள் வழங்கி வருகின்றனர். இதற்கிடையே, மத்திய அமைச்சரவைச் செயலர் திரு. ராஜீவ் கவுபா தலைமையில், மெய்நிகர் முறையில் இன்று நடைபெற்ற, தேசிய நெருக்கடி நிர்வாகக் குழுவின் கூட்டத்தில், சிக்கிம் மாநில அரசின் தலைமைச் செயலர்

சிக்கிம் 2 (4)

திரு. பாதக் உள்ளிட்டோர் கலந்து கொண்டு, வெள்ளத்தால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து மறு ஆய்வு மேற்கொண்டனர். பிரதமர் திரு. நரேந்திர மோடி நேற்று, சிக்கிம் முதலமைச்சர் திரு. பிரேம்சிங் தமங்-கை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, நிலவரங்கள் குறித்து பேசியதும் குறிப்பிடத்தக்கது.

------------------------

*அனுராக்* (11)

மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு. அனுராக் தாக்கூர் இன்று சத்தீஸ்கர் மாநிலம் ராய்ப்பூரில், நேரு யுவகேந்திரா அமைப்பின் மாநில அளவிலான, இளையோர் திருவிழாவை தொடக்கி வைத்தார். இந்த 2 நாள் விழாவில், சத்தீஸ்கர் மாநிலத்தின் 28 மாவட்டங்களில் இருந்து, சுமார் 500 இளைஞர்கள் பங்கேற்று உள்ளனர். பல்வேறு கலை நிகழ்ச்சிகளும், பேச்சுப் போட்டி, கவிதை போட்டி, ஓவியப் போட்டி மற்றும் புகைப்பட போட்டியும், விழாவில் இடம்பெறுகின்றன. மாநில அளவிலான இப்போட்டிகளில் வெற்றி பெறுவோர், தேசிய இளைஞர் விழாவில் பங்கேற்க தகுதி பெறுவார்கள். விடுதலையின் அமிர்த காலத்திற்கான பிரதமர் திரு. நரேந்திர மோடியின் பாஞ்ச் பிராண் உறுதிப்பாட்டிற்கு ஏற்ப, இவ்விழாவிற்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

------------------------

*ஹர்தீப் சிங்* (17)

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் செயல்திறன் மேம்பாடு தொடர்பாக இன்று புதுடெல்லியில் நடைபெற்ற தேசிய பயிலரங்கை, மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி தொடக்கி வைத்தார். உழைப்பாளர் சக்தியின் செயல்திறனை அதிகரிக்க, அரசு சிறப்பு முக்கியத்தும் அளிப்பதாக, அவர் கூறினார். முன்பெல்லாம் இதற்கு அதிக கவனம் செலுத்தப்படாத நிலையில், தற்போது, இதற்கென தனி ஆணையம் இருப்பதையும் அவர் சுட்டிக் காட்டினார். 2014ஆம் ஆண்டு வரையிலான 10 ஆண்டுகளில், நகர்ப்புற மேம்பாட்டுத் துறை மூலமான அனைத்துத் திட்டங்களுக்கும் மொத்தம் 1 லட்சத்து 78 ஆயிரம் கோடி ரூபாய் மட்டுமே செலவிடப்பட்ட நிலையில், கடந்த 9 ஆண்டுகளில் இத்துறைக்கு, 18 லட்சம் கோடி ரூபாய் செலவிடப் பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். ஸ்வச் பாரத் இயக்கத்தினால், நாட்டில் மிகப் பெரிய மாற்றம் ஏற்பட்டு உள்ளதாக தெரவித்த அவர், சுத்தம் பற்றிய மக்களின் மனப்பாங்கு மாறி இருப்பதும் இதில் அடங்கும் என்றார். பிரதமர் ஆலோசகர் திரு. தருண் கபூர், மத்திய அரசின் நகர்ப்புற மேம்பாட்டுத் துறைச் செயலர் திரு. மனோஜ் ஜோஷி உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

------------------------

*கிரிக்கெட்* (13)

உலகக் கோப்பைக்கான ஐசிசி ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டித் தொடர், இன்று தொடங்கி உள்ளது. இன்றைய தினம் அகமதாபாத்தில்

நடைபெறும் முதலாவது போட்டியில், இங்கிலாந்து அணியால் நிர்ணயிக்கப்பட்ட, 283 ரன் என்னும் வெற்றி இலக்கை நோக்கி 2ஆவதாக ஆடும் நியூசிலாந்து அணி, சற்று முன் வரை, 1 ஓவரில், விக்கெட் இழப்பின்றி, 10 ரன் எடுத்து இருந்தது. முன்னதாக, டாஸ் ஜெயித்த நியூசிலாந்து அணியால் முதலில் ஆடப் பணிக்கப்பட்ட இங்கிலாந்து அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில், 9 விக்கெட் இழப்பிற்கு, 282 ரன் எடுத்தது. உலகக் கோப்பை போட்டித் தொடரில், இந்திய அணி தனது முதலாவது போட்டியில், சென்னையில் வரும் ஞாயிற்றுக் கிழமை, ஆஸ்திரேலிய அணியுடன் மோத உள்ளது. மும்பை, ஹைதராபாத், பெங்களூரு, டெல்லி உள்ளிட்ட 10 நகரங்களில் நடைபெற உள்ள உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகளில், 10 நாடுகள் பங்கேற்கின்றன.

------------------------

*ஆசிய விளையாட்டு* (12)

சீனாவில் நடைபெறும் 19ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில், இந்தியா இதுவரை, 86 பதக்கங்களை வென்று, பதக்கப் பட்டியலில் 4ஆவது இடத்தில் உள்ளது. 21 தங்கம், 32 வெள்ளி, மற்றும், 33 வெண்கலப் பதக்கங்கள் இதில் அடங்கும். இதற்கு முன்னர் ஜாகர்தாவில் நடைபெற்ற 18ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில், 70 பதக்கங்ளை வென்ற இந்தியா, இம்முறை அதையும் தாண்டி புதிய சாதனை படைத்துள்ளது. 19ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இன்று, இந்திய ஆடவர் காம்பவுண்ட் வில்வித்தை அணி, தங்கப் பதக்கம் வென்றது. முன்னதாக, மகளிர் காம்பவுண்ட் வில்வித்தை பிரிவில், ஜோதி-பர்ணீத்-அதிதி ஆகியோர் அடங்கிய மூவர் அணி, தங்கம் வென்றது. கலப்பு இரட்டையர் ஸ்குவாஷ் பிரிவில், இந்தியாவின் ஹரிந்தர்பால் சந்து-தீபிகா பள்ளிக்கல் இணை, தங்கப் பதக்கம் வென்றது.

------------------------

*பெருமூளை வாதம்* (8)

பெருமூளை வாதத்தால் பாதிக்கப் பட்டவர்களின் பிரச்சனைகள் மற்றும் அதற்கான தீர்வுகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கிலான, உலக பெருமூளை வாத நோய் தினம், இன்று கடைபிடிக்கப் படுகிறது. பெருமூளை வாதத்தால் பாதிக்கப் பட்டவர்களும், சமுதாயத்தின் செயல்பாடுகளில் முழுமையாக பங்கேற்பதை உறுதிப் படுத்துவதில் குடும்பத்தினர் உள்ளிட்ட அனைத்து தரப்பினரின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில், மத்திய சமூக நீதி அமைச்சகம் சார்பில், இன்றைய தினம் நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

------------------------

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

அனைத்து மாநிலங்களின் வளர்ச்சி மூலமாகவே, இந்தியா முன்னேறிய நாடாக மேம்பட முடியும் என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இன்று வடலூர் வள்ளலாரின் 200ஆம் ஆண்டுப் பிறந்தநாளை ஒட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி அன்னாருக்கு புகழாரம் சூட்டி உள்ளார்.

தமிழகத்தில், இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புகள் மூலம் பொருளாதாரத்தை மேம்படுத்த, அரசு, நடவடிக்கை எடுத்து வருவதாக, தமிழக முதலமைச்சர் திரு. முக. ஸ்டாலின் கூறியுள்ளார்.

சிக்கிமில் நேற்று பனியாற்று ஏரி கரை உடைந்து ஏற்பட்ட திடீர் வெள்ளத்தால் உயிரிழந்தோர் எண்ணிக்கை, 14ஆக அதிகரித்து உள்ளது.